# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,432 — 1958 ජූලි 19 වැනි සෙනසුරාදා — 19.7.1958**

11,432 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இலக்கம் வி. 48 **உப உணவுப் பொருட்கள்.**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப் பாட்டுச் சட்டத்தில் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு வவுனியா மாவட்டத்தின் உதவி விலைக்கட்டுப் பாட்டதிகாரி (உணவு) செல்லப்பா சின்னத்தம்பி ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1958 ம் ஆண்டு ஆனி மாதம் 25 ம் திகதியைக் கொண்ட 11,373 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள் சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியனவையை பொறுத்தமட்டில், குறித்த அட்டவணையில் 2, 3, 4, 5 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும், 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மைசூர்ப்பருப்பு, முழு உழுந்து, கடலைப் பருப்பு, உருளைக்கிழங்கு முதலியவைகளைக் கொண்ட எனது விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம், 3 ம், 4 ம், 5 ம் பகுதிகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடமுறையாய் வருமாறு விதிக்கிறேன்.

(3) 1958 ம் ஆண்டு ஆனி மாதம் 25 ந் திகதியைக் கொண்ட 11,373 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆனி மாதம் 25 ந் திகதி பிரசுரமான உப உணவுப் பொருட்களைக் குறிக்கும் 3 ம் பந்தியிலிருந்து 8 ம் பந்தி வரையுள்ள இலக்கம் வி. 47 ஐக் கொண்ட விலைக் கட்டளையுடன் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பொருட்களைக் குறிக்கும் அப்பந்திகள் இணைக்கப்பட்டுள்ளனவை போலப் பாவிக்கப்படல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

வவுனியா கச்சேரியில் 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 17 ந் திகதி பிற்பகல் 3 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

எஸ். சின்னத்தம்பி,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
வவுனியா பகுதி.

### அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | | பத்தி 3 | | பத்தி 4 | | பத்தி 5 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வவுனியா, புதுக்குளம், ஆசிகுளம், கள்ளிக் குளம், ஈரப்பெரியகுளம், மடுக்கந்தை, நெளுக் குளம் | | கனகராயன் குளம், மாங் குளம், நாவற்குளம், மருதமடு, இராசேந் திரன்குளம், சூடு வெந்த புலவு, மாமடுவா, உலுக்குளம், வாழை வைத்தகுளம், செட்டி குளம், கப்பச்சி, பனைய வாடி அனநதர் புளி யங்குளம், ஒலுமடு, மருகோடை, நெடுங் கேணி, பழம்பாசி | | முல்லைத்தீவு வெள்ள முள்ளிவாய்க்கால் | | கறுப்பட்ட முறிப்பு, கற் சிலமடு, அம்பலவன் பொக்கணை, புதுக்குடி யிருப்பு, குமுளமுனை, தனியூற்று, முள்ளிய வளை, கொக்குத் தொடு வாய், கொக்கிளாய் | |
| விபரம் | மொத்த அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை | மொத்த அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை | மொத்த அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை | மொத்த அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. முழு உளுந்து | 48 0 | 0 45 | 49 50 | 0 46 | 50 50 | 0 47 | 52 0 | 0 48 |
| 2. கடலைப்பருப்பு | 42 0 | 0 38 | 43 50 | 0 39 | 45 0 | 0 40 | 46 50 | 0 41 |
| 3. மைசூர்ப்பருப்பு | 56 50 | 0 52 | 58 0 | 0 53 | 59 50 | 0 54 | 61 0 | 0 55 |
| 4. உருளைக்கிழங்கு | 30 0 | 0 30 | 31 50 | 0 32 | 33 0 | 0 34 | 34 50 | 0 36 |

**குறிப்பு** :—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்கலாகாது.


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.